**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : MC.17/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : கற்பகம் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : அன்புதாஸ் | Age | : 29 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 26-11-2025.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது திருமணத்திற்கு பின்னிட்டு எனது மாமனார், மாமியாரோடு கூட்டுக்குடும்பமாக நல்ல முறையில் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. நிரூபன வாக்குமூலுத்தின் 6 வது பத்தியில் எனது மாமனார், மாமியார், எனது கணவர் என்னை கொடுமை செய்தததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் தொடர்பாக எனது கணவர் குடும்பத்திற்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகார் மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது கனவர் நான் கருவுற்ற காலத்தில் மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். எனது குழந்தை பிறந்த பின்னிட்டு எனது கணவரும் நானும் எனது குழந்தையின்

பிறந்தநாளை கொண்டினோம் என்றால் சரியல்ல. என் கணவருக்கு எதிராக தனியாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் கும்பகோணம்அணைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் சம்மந்தமாக பேோலுசார் என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த புகார் மனுவில் கணவருடன் சேர்ந்து வாழ வைக்க வேண்டும் என்று கேட்டேன் என்றால் சரிதான். எனது கணவர் என்னை கொடுமைப்படுத்தியதாக பொய்யாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. கும்பகோணம்அணைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னை சேர்ந்து வாழ சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எந்த தேதியில் எனது கணவருடன் சேர்ந்து வாழ சென்றேன் என்றால் 2022 ம் வருடம் தேதி நினைவில்லை நான் 6 மாதம் சேர்ந்து வாழ்ந்தேன். அதன் பின்னிட்டு எனது கணவர் பிரச்சனை செய்ததால் நான் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டேன். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பொய்யாக பிரச்சனை நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை விட்டு விட்டு எந்த பிரச்சனையும் இல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினேன் என்றால் சரியல்ல. என் கணவர் என்னை அடித்து துரத்தி விட்டார். நான் எனது கணவரை பழிவாங்க வேண்டும் என்று பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே என் கணவரை பிரிந்து வீட்டை விட்டு வெளியேறியதால் எனது கணவர் என்னை பராமரிப்பு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்ட்டது..**

**மனுதாரா தர ப்பில்  கூடுதல் சாட்சியம் இல்லை என்று கூறியதால் மனுதரார் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.**

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : MC.17/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : RW-1 | Village: | |
| Name | : அன்புதாஸ் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : ஜெயராமன் | Age | : 35 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 26-11-2025.**

**முதல் விசாரணை**

எனது மனைவி எனக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விவரம் தெரியும். எனக்கும் எனது மனைவிக்கும் 04-06-2021ம் தேதி எங்கள் ஊரில் திருமணம் திருமண மண்டபத்தில் நடப்பதாக இருந்த திருமணம் கொரோனா காரணமாக எங்கள் வீட்டில் நடந்தது . எனக்கு 16-04-2022 ம் தேதி ஆதினி என்ற பெண் குழந்தை பிறந்தது. நானும் எனது மனைவியும் திருமணத்திற்கு பின்னிட்டு எங்கள் வீட்டில் கூட்டுககுடும்பமாக வாழ்ந்து வந்தோம். எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. எந்த காரணமும் இல்லாமல் என்னுடன் சேர்ந்து வாழ மறுத்து வீட்டை வெளியேறியதால் நான் எனது மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. எனது குழந்தையை

நான் பராமரிக்க ஜீவனாம்சம் தொகை கொடுக்க தயாராக உள்ளேன். எனது மனைவி என் வீட்டை விட்டு செல்லும்போது நான் வைத்திருநத ரூபாய் 5,000 யும் அவருக்கு திருமணத்தின்போது போட்ட நகைகளையும் எடுத்து சென்றுவிட்டார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது மனைவி எங்கள் வீட்டை விட்டு செல்லும்போது நான் வைத்திருநத ரூபாய் 5,000 யும் அவருக்கு திருமணத்தின்போது போட்ட நகைகளையும் எடுத்து சென்றுவிட்டார் என்ற விவரத்தை பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவி, என் குழந்தையை நான் தற்போது பராமரிக்க த யாராக உள்ளேன் என்றால் சரிதான். என் மனைவியுடன் நான் சேர்ந்த வாழ தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் விவசாய தொழில் மூலம் ரூ.40,000 யும் கொத்தனார் வேலையின் மூலம் மாதம் ரூ.25,000 மும் சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவியை பராமரிப்பதற்கு போதுமான வருமானம் உண்டு என்றாலும் மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்ட்டது..**

**மனுதாரா தரப்பில் கூடுதல் சாட்சியம் இல்லை என்று கூறியதால் மனுதரார் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.**

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**